1986 நவம்பர் 19]

கேட்கின்றபோது, அரசு சர்வே செய்தபோது, சில பகுதிகள் விடுபட்டிருக்கின்றன என்கிறார்கள். எனவே, இந்த காட்டு நாயக்கர்களுக்கு உதவுகின்ற நோக்கத்தோடு, அரசு மீண்டும் எந்தெந்தப் பகுதிகளிலே காட்டுநாயக்கர்கள் வசிக்கின்றார்கள் என்று ஆய்ந்து என்னுடைய தொகுதியாகிய........(மணியடிக்கப்பெற்றது.)

(முற்பகல் 9.30)

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆவன செய்யும்.

திரு. மு. ஜான் வின்சென்ட்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்திலே என்னுடைய தொகுதியிலே உள்ள கனக்காடு பகுதியிலே 125 குடும்பங்கள் காட்டு நாயக்கர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் வசிக்கிறார்கள். அந்த வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுடைய எஸ்.எஸ்.எல்.சி. சர்டிபிகேட்டில் காட்டு நாயக்கர் என்றுதான் பதிவாகியிருக்கிறது. ஆனால் அவர்கள் படித்து முடித்து வேலைக்குச் செல்லும் போதோ அல்லது உயர்படிப்பிற்குச் செல்லும்போதோ காட்டு நாயக்கர் என்று சர்டிபிகேட் கொடுக்க மறுக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு காட்டு நாயக்கர் என்று சர்டிபிகேட் கொடுக்கச் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது உண்மையாக இருக்குமானால் அதன்மீது அரசு நடவடிக்கை எடுக்கும்.

வெம்பக்கோட்டை ஒன்றியம், தாயில்பட்டி ஆதிதிராவிடர்களுக்கு தனி வாசக சாலை.

95—(வினா எண் 7860) திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) வெம்பக்கோட்டை ஒன்றியம், தாயில்பட்டி கிராமத்தில ஆதிதிராவிடர்கட்கு தனியாக வாசக சாலை கட்டும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) விரைவில் வேலை தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை (ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக தாயில்பட்டி கிராமத்திலே ஒரு லோக்கல் லைப்ரரி இருக்கிறது. ஆனால் ஆதிதிராவிட மாணவர்கள் அங்கே

சென்று படிப்பதற்கு முடியவில்லை. ஆதிதிராவிட மக்களுக்கு எத்தனையோ நன்மைகளை அரசு செய்து அவை நடந்து கொண்டிருக்கின்றன, அப்படியிருக்கிறபோது இதையும் அரசு உத்தேசித்து அங்கே அவர்களுக்கு தனியாக வாசக சாலை ஒன்றை அமைத்துத் தர முன்வருமா ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜர் மாவட்டம் வெம்பக்கோட்டை ஒன்றியம் தாயில்பட்டி கிராமத்திலே உள்ள ஆதிதிராவிட மக்களுக்கு தனியாக வாசகசாலை கட்டவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அங்கே பொது நூலகம் ஒன்று நூலக ஆணைக் குழுவின் கீழ் இயங்கிக்கொண்டிருக்கிறது. தாயில்பட்டி கிராமத்தில் 5347 மக்கள் இருக்கிறார்கள். அதிலே ஆதிதிராவிடர்கள் 502 பேர்கள்தான் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கென்று தனியாக நூல்நிலையம் கட்டுவதற்கு எந்தவிதமான செலவும் செய்ய நிதி ஒதுக்கப்படவில்லை. அதன்மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே ஆதிதிராவிட மக்களுக்கென்று தனியாக ஒரு பழைய கட்டடம் இருந்தது. அதை இடித்துவிட்டு யூனிசெப் மூலமாக ஒரு வாசக சாலை கட்டித்தருவதாக சொல்லப்பட்டது. அதையாவது மாண்புமிகு அமைச்சரவர்கள் தலையிட்டு அவர்களுக்காகக் கட்டித்தருவதற்கு முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதிதிராவிடர்களைப் பொறுத்தவரையில் தனியாக நூலகங்கள் கட்டிக் கொடுப்பதற்குத் திட்டங்கள் இல்லை. அப்படி இருப்பதாகச் சொல்கிறார்கள். அப்படி இருப்பதைப் பற்றித் தீவிரமாக ஆராய்ந்து என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அந்த நடவடிக்கையை அரசு எடுக்கும்.

பாப்பாக்குடி ஒன்றியம், வடக்கு அரியநாயகிபுரம் ஊராட்சியில் குடிநீர் பராமரிப்புக்கு ஆண்டுச் செலவு.

76—(*வினா எண் 9368) டாக்டர் கே. பி. இராமலிங்கம் மற்றும் திரு. கூடலூர் இ. வி. வேலு : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாப்பாக்குடி ஒன்றியம், வடக்கு அரியநாயகிபுரம் ஊராட்சியில் 1982-83, 1983-84 மற்றும் 1984-85-ம் ஆண்டுகளில் குடிநீர்த் திட்டப் பராமரிப்புக்கென ஆண்டுக்கு ரூ. 40,000 செலவிடப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், குறிப்பாக என்னென்ன பணிகள் மேற்கொள்ளப்பட்டன ?